**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051841

1. District : மதுரை மாவட்டம் | PS: ஊ.த.த பிரிவு காவல்நிலையம் | Year: 2021 ஆண்டு | FIR No.: 11/2021 மு.த.அ. எண் | Date: 24.09.2021 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: U/S 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: ஊ.த.த. சட்டம் 1988 Sections பிரிவுகள்: as amended by the
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Prevention of Corruption (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை (1) 20.09.2021 at 13.00 hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை (2) 23.09.2021 at 11.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.09.2021 Time : நேரம் 08.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.09.2021 Time : நேரம் 09.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 10 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பனையூர் கிராமம், மதுரை தெற்கு வட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : மதுரை மாவட்டம்.
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. சோலை
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சேத்தையன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 44/2021
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் தண்ணீர் திறப்பு செய்தல்
(g) Address : முகவரி 4-53/42A, அய்யனார்புரம், பனையூர் அஞ்சல், மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. சத்திய ஜோதி, கிராம நிர்வாக அலுவலர், பனையூர் கிராமம், மதுரை தெற்கு வட்டம், மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Saroo... 24/9/21   A. Kannan Insp. ... 24/9/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.09.2021 at 10.00 hrs.

Name: பெயர் அ. கண்ணன்
Rank: நிலை No. எண் காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, மதுரை (24.09.2021)

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 24.09.2021-ம் தேதி காலை சுமார் 08.30 மணிக்கு நான் (A. கண்ணன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை) மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியிலிருந்த போது, மதுரை மாவட்டம் பனையூர் அஞ்சல், அய்யனார்புரத்தைச் சேர்ந்த முத்தையா மகன் சோணை என்பவர் ஆஜராகி எழுத்துப்பூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர். M. சோணை, த/பெ. முத்தையா,1-53 / 42 A, அய்யனார்புரம், பனையூர் அஞ்சல், மதுரை மாவட்டம். பெறுநர். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை மாவட்டம் அய்யனார்புரத்தில் குடும்பதுடன் வசிக்கிறேன். கடந்த 07.02.2020-ல் தேதியன்று எங்கள் ஊர் வேலாயுதம்பிள்ளை மகன் ஆறுமுகம் என்பவரிடமிருந்து ரீசர்வே எண் 34/1B1A, 34/1C1A1-ல் 1280 சதுரடி உள்ள பிளாட் எண் 10-ஐ எனது பெயரில் கிரையம் முடித்தேன். அதற்கும் முன்னதாக கடந்த 17.10.2019-ம் தேதியன்று எங்கள் ஊர் முத்துச்சாமி மனைவி விஜயா என்பவருக்குச் சொந்தமான சர்வே எண் 44/11-ல் உள்ள 4 ½ சென்ட் மனையிடத்தை எனது பெயரில் 982 சதுரடியும், என் அக்கா அய்யம்மாள் பெயரில் 948 சதுரடியுமாகப் பிரித்து தனித்தனியாகப் பத்திரப்பதிவு செய்து கொண்டோம். பின்னர், ரீசர்வே எண் 34/1B1A, 34/1C1A1-ல் உள்ள எனக்குச் சொந்தமான பிளாட் எண் 10-க்கும் எனது பெயரில் பட்டா பெயர் மாறுதல் வேண்டி கடந்த 16.09.2021-ம் தேதியன்று பனையூர் கூட்டுறவு வங்கி இ-சேவை மையம் மூலம் மதுரை தெற்கு தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்தேன். மேலும், கடந்த 17.09.2021-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை சுமார் 11.30 மணியளவில், பனையூர் கூட்டுறவு வங்கி இ-சேவை மையம் மூலம் சர்வே எண் 44/11-ல் எனது பெயரிலும், அக்கா அய்யம்மாள் பெயரிலும் உள்ள மனையிடத்துக்கு எங்கள் இருவர் பெயரில் பட்டா பெயர் மாறுதல் வேண்டி மதுரை தெற்கு தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் அவர்களுக்கு தனித்தனியாக விண்ணப்பம் செய்தேன். சிறிது நேரம் கழித்து மதியம் சுமார் 01.00 மணியளவில், 82208 11150 என்ற எண்ணிலிருந்து, எனது செல்போன் 90470 70321 என்ற எண்ணிற்கு பேசிய பெண் ஒருவர் தனது பெயர் சத்யஜோதி என்றும், தான் பனையூர் கிராம நிர்வாக அலுவலர் என்றும் அறிமுகம் செய்துகொண்டு, உங்கள் விண்ணப்பம் என்னிடம் வந்துள்ளது,

பட்டா பெயர் மாறுதல் செய்வதற்கு சொத்து பத்திர நகல் மற்றும் வில்லங்கச்சான்று நகலை திங்கள் கிழமை கொண்டு வாருங்கள் என்று கூறினார். அதன்படி, நான் கடந்த 20.09.2021-ம் தேதி திங்கள் கிழமை, மதியம் சுமார் 01.00 மணியளவில், திருமதி. சத்யஜோதி அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து அவர் கேட்ட ஆவணங்களை ஒப்படைத்தேன். அவர் ஆவணங்களை பார்வையிட்ட பின்னர், உங்கள் விண்ணப்பத்தின்படி, ரீசர்வே எண் 34/1B1A, 34/1C1A1-ல் உள்ள சொத்துக்கு உங்கள் பெயரிலும், சர்வே எண் 44/11-ல் உள்ள சொத்துக்கு உங்கள் பெயரிலும், அய்யம்மாள் பெயரிலும் கூட்டுப் பட்டாவாகவும் மட்டுமே பெயர் மாற்றம் செய்யமுடியும் என்று கூறினார். நான் அதற்கு ஒப்புக்கொண்டேன். உடனே அவர் என்னிடம், ஒரு பத்திரத்துக்கு 4,000/- ரூபாய் வீதம் மொத்தம் 3 பத்திரங்களுக்கு சேர்த்து 12,000/- செலவாகும், பணம் தயாரானவுடன் கொண்டு வாருங்கள், உடனே வேலையை முடித்து தருகிறேன் என்று சொன்னார். நான் கிராம நிர்வாக அலுவலர் சத்தியஜோதியிடம் அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணத்தை செலுத்திவிட்டேனே. பிறகு எதற்கு ரூ.12,000/- எனக்கேட்டேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் சத்தியஜோதி, அது அரசுக்கு செலுத்திய பணம், நான் கேட்பது எனது செலவுக்கு என்றும், பணம் ரூ.12,000/- கொடுத்தால்தான் பட்டா மாறுதலுக்கு ஏற்பாடு செய்ய முடியும் எனக் கூறினார். நான் இதுகுறித்து, என் அக்கா அய்யம்மாளிடம் சொன்னவுடன் அவர் கூட்டுப்பட்டா வாங்குவதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால், தற்போது தன்னிடம் பணம் இல்லை என்று கூறினார். எனவே, நான் நேற்று 23.09.2021-ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில், திருமதி. சத்தியஜோதி அவர்களை, அவரது அலுவலத்தில் நேரில் சந்தித்து எனது பட்டா மாறுதல் குறித்து கேட்ட போது, அவர் என்னிடம், நான் கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்றும், கொரானா காரணமாக தொழில் சரியில்லாமல் கஷ்டப்பட்டு தொழில் செய்கிறேன், எனவே பார்த்துச் செய்யுங்கள் என்றும் கூறினேன். அதற்கு அவர் பொதுவாக, ஒரு பத்திரத்திற்கு ரூ.4,000/- வாங்குகிறோம், உங்களுக்காக ஒரு பத்திரத்துக்கு 1,000/- ரூபாய் வீதம் குறைத்துக் கொள்கிறேன், மொத்தமாக 9,000/- ரூபாய் கொண்டு வாருங்கள், உடனே பட்டா பெயர் மாறுதல் செய்ய ஏற்பாடு செய்கிறேன். இல்லாவிட்டால் உங்கள் வேலை முடியாது என்றும், பணம் தயாரானவுடன் கொண்டு வருமாறு கூறினார். நான் இந்த தகவலை என் அக்காவிடம் சொன்னவுடன்,

அவர் இவ்வளவு கஷ்டமான சூழ்நிலையிலும் நம்மிடம் பட்டா மாற்றம் செய்ய பணம் கேட்கிறார்களே என்று வருத்தப்பட்டார். எனக்கும் மன வருத்தமாக இருந்தது. அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திய பின்பும், பட்டா மாறுதல் ஏற்பாடு செய்ய ரூ.9,000/- லஞ்சம் கேட்கும் திருமதி. சத்தியஜோதி, கிராம நிர்வாக அலுவலர், பனையூர் கிராமம் அவர்கள் மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். பனையூர் கிராம நிர்வாக அலுவலர் சத்தியஜோதி அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.9,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன். மேலும், எனது பெயரிலும், என் அக்கா அய்யம்மாள் பெயரிலும் உள்ள சொத்துப் பத்திரங்கள், வில்லங்கச் சான்று, பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் (1) 2021/0103/24/177494, (2) 2021/0103/24/177696, (3) 2021/0103/24/177699, அவற்றின் ஒப்புகை சீட்டுகள் ஆகியவற்றின் நகல்களையும் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, Sd/- XXXX (M.Sonai) 24/9/21. Sir, Received the written complaint on 24.09.2021 at 08.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti – Corruption, Chennai and I registered a case in Madurai Vigilance and Anti – Corruption in Cr. No. 11/2021 u/s 7 of P.C Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at 09.00 hrs and took up investigation. Sd/- XXXX (A. KANNAN), Inspr / V&AC, 24/09/2021.

Original FIR, original written complaint of Tr. M. Sonai, S/o. Muthaiah, along with the documents enclosed by the Complainant is submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases under Prevention of Corruption, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance and Anti – Corruption, Chennai.

A. Kannan
INSP/V&AC
24/9/2021
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Madurai